UNIVERSITY ... 24 AUG 2000 PERIODICALS DIVISION

REGISTERED AS A CATHOLIC WEEKLY (P.197) Established 19 Feb. 1876

# பாதுகாவலன்

இலங்கையின் முதல் தமிழ் கத்தோலிக்க வாரஏடு

PATHUKAVALAN

மலர் : 124
இதழ் : 07
ஆனி : 24
விலை : ரூபா 5



பஸ்ரியன் ஜோதிநாதன்



நிக்சன் டொறக்ஸ்



அன்ரன் அமலதாஸ்



மரியகொலன் ஞானேந்திரன்

## யூபிலி புதிய குரவர் 'அமதி'களுக்கு இருவர்



பாலசிங்கம் ஜெயபாலன் அ.ம.தி



ஜெயந்தன் பச்சேக் அ.ம.தி.

அருள்சகோதரர் பாலசிங்கம் ஜெயபாலன் அ.ம.தி. 31.05.2000 அன்று மன்னார் பேராலயத்தில் மன்னார் ஆயரால் குருவாக திருநிலைப்படுத்தப்பட்டார். இவர் வவுனியா இளமருதன்குளத்தைச் சேர்ந்த பாலசிங்கம் - மரியபுஷ்பம் தம்பதிகளின் இரண்டாவது மகனாவார்.

இவர் தமது ஆரம்பக்கல்வியை இளமருதன்குளம், சேமமடு, வங்காலை ஆகிய இடங்களில் முடித்துக்கொண்டு 1986இல் யாழ். புனித சூசையப்பர் சிறிய குருமடத்தில் சேர்ந்து, புனித பத்திரிசியார் கல்லூரியில் தமது கல்வியைத் தொடர்ந்தார்.

தமது குருத்துவக் கல்லூரியை புனித சவேரியார் குருத்துவக் கல்லூரியிலும் கண்டி தேசிய குருமடத்திலும் மேற்கொண்டபின் 1999 இல் வவுனியா புனித அந்தோனியார் ஆலயத்தில் திருத்தொண்டராக திருநிலைப்படுத்தப்

(தொடர்ச்சி 4ஆம் பக்கம்)

# யாழ். மறைமாவட்டத்தின் யூபிலி ஆண்டுக் குருக்களே வருக! வருக!!

யாழ். மறைமாவட்ட வருடாந்த குருப்பட்ட நிகழ்வு எதிர்வரும் ஜுன் மாதம் 24 ஆம் திகதி யாழ். ஆயர் தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகையால் சில்லாலை கதிரைமாதா ஆலயத்தில் நிகழ்த்தப்படும். யூபிலி ஆண்டுக் குருக்கள் என சிறப்புப் பெயர்பெறும் பஸ்ரியன் ஜோதிநாதன், நிக்சன் டொறக்ஸ், அன்ரன் அமலதாஸ், மரியகொலன் ஞானேந்திரன் ஆகிய நால்வரும் குருக்களாகத் திருநிலைப்படுத்தப்படுவர். இவர்களில் இருவர் சில்லாலைப் பங்கைச் சேர்ந்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. இவர்களின் பணி சிறக்க பாதுகாவலனின் அன்பு நெஞ்சங்களின் வாழ்த்துக்களைத் தெரிவிக்கிறோம்.

அருள்சகோதரர் பஸ்ரியன் ஜோதிநாதன் சில்லாலைபுனித கதிரைமாதா ஆலயத்தைச் சேர்ந்த காலஞ்சென்ற பெஞ்சமின் ஜோன்பிள்ளை திருமதி லூர்து தம்பதிகளின் புதல்வராவார்.

இவர் சில்லாலை றோ.க. த.க. பாடசாலையில் ஆரம்பக் கல்வியையும், புனித பத்திரிசியார் கல்லூரியில் உயர்கல்வியையும் பெற்றார்.

அருள்சகோதரர் நிக்சன் டொறக்ஸ் செம்பியன்பற்று புனித பிலிப்புநேரியார் ஆலயத்தைச் சேர்ந்த காலஞ்சென்ற திரு திருமதி ஜேக்கப் நல்லையா, கொலஸ்ரிக்கா தம்பதிகளின் புதல்வராவார்.

இவர் தனது ஆரம்பக்கல்வியை செம்பியன்பற்று றோ.க. த.க. பாடசாலையிலும், அ.த.க. பாடசாலையிலும் கற்று உயர் கல்வியை புனித பத்திரிசியார் கல்லூரியில் பயின்றார்.

அருள்சகோதரர் அன்ரன் அமலதாஸ் சில்லாலை புனித யாகப்பர் ஆலயத்தைச் சேர்ந்த திரு மரியதாசன் திருமதி மேரி பிலோமினா தம்பதிகளின் புதல்வராவார். இவர் பண்டத்தரிப்பு றோ.க.த.க. பாடசாலையில் ஆரம்பக் கல்வியையும் புனித பத்திரிசியார் கல்லூரியில் உயர் கல்வியையும் பெற்றார்.

அருள்சகோதரர் மரியகொலன் ஞானேந்திரன் மிருசுவில் புனித நீக்கிளார் ஆலயத்தைச் சேர்ந்த காலஞ்சென்ற திரு மரியராஜரட்ணம் திருமதி றோசம்மா தம்பதிகளின் புதல்வராவார்.

இவர் தனது ஆரம்பக் கல்வியை மிருசுவில் றோ.க.த.க. பாடசாலையிலும், உசன் இராமநான் மகாவித்தியாலயத்திலும் கற்று, உயர்கல்வியை புனித பத்திரிசியார் கல்லூரியில் பயின்றார்.

இவர்கள் புனித மார்ட்டினார் குருமடத்தில் ஆரம்பக் குருத்துவப் பயிற்சியைப் பெற்று, கொழும்புத்துறை புனித சவேரியார் குருத்துவக் கல்லூரியில் மெய்யியலையும், இறையியலையும் கற்றனர். 25.11.99 அன்று இவர்கள் திருத்தொண்டர்களாகத்திருநிலைப்படுத்தப்பட்டனர்.

**பாதுகாவலன் வரவில்லை**

30.04.2000 இதழின் பின்னர் பாதுகாவலன் யாழ். நிலைமைகள் காரணமாக் வெளிவரவில்லை. 30.04.2000பின்னர் 24.06.200 இதழே வெளிவருகிறது. (ஆ.ர்.)

## இடம்பெயர்ந்த நிலையிலும் பணிபுரியும் 'கியூடெக்'

மனித முன்னேற்ற நடுநிலையம் - கியூடெக் (HUDEC) இடம்பெயர்ந்திருந்தாலும் இயலுமான மனித உதவிப் பணிகள் தொடர்கின்றன. இயக்குனர் சி.யே. ஜெயக்குமார் அடிகள் மானிப்பாய் புனித அன்னாள் ஆலயத்தில் தற்காலிக காரியாலயத்தை அமைத்து பணிகளை மேற்கொண்டுள்ளார்.

தலைமைக் காரியாலயத்திற்கு அனுப்புவதற்கு வழமையாக அவர்கள் தயார் செய்யும் யாழ். நிலைமை பற்றிய அறிக்கையின் மே30 யூன்15 காலப் பகுதியின் சில முக்கிய குறிப்புக்களை கீழே காணலாம்.

யாழ் நிலைமை பற்றிய அறிக்கை
Situation Report May 30 - June 15th

தென்மராட்சி, யாழ் மாநகர சபைப் பிரதேச மக்கள் இடம் பெயர்ந்து வடமராட்சியிலும் வலிகாமத்தின் சில பகுதிகளிலும் தஞ்சமடைந்துள்ளனர்.

| பிரதேசம் | மொத்த சனத்தொகை | | இடம்பெயர்ந்த சனத்தொகை | | வீதம் |
|---|---|---|---|---|---|
| | குடும்பம் | எண்ணிக்கை | குடும்பம் | எண்ணிக்கை | |
| யாழ்ப்பாணம் | 13073 | 42982 | 12360 | 40560 | 95% |
| நல்லூர் | 18392 | 58964 | 12110 | 38995 | 66% |
| கோப்பாய் | 17369 | 58337 | 4303 | 15660 | 25% |
| சாவகச்சேரி | 19613 | 71871 | 15070 | 53713 | 77% |
| மருதன்கேணி | 1963 | 7011 | 1282 | 4497 | 65% |
| பளை | 1900 | 7070 | 1900 | 7070 | 100% |

இவர்களில் 75வீதமானோர் உறவினரின் வீடுகளிலும் 25 வீதமானோர் பாடசாலைகள், ஆலயங்கள் போன்ற இடங்களிலும் தஞ்சமடைந்துள்ளனர். இடம்பெயர்ந்தோருக்கு 3 நாட்களுக்குச் சமைத்த உணவும் அதன்பின்னர் உலர் உணவும் கொடுப்பதற்கு அரச ஒழுங்கு இடமளித்தாலும் அரச நிர்வாகத்தினர் இப் பணியை

(தொடர்ச்சி 04ஆம்பக்கம்)

## நம்பிக்கையும் ஆறுதலும் தரும் வார்த்தைகளை ஆயர் பகிர்ந்துகொள்கிறார்

நாமெல்லோரும் இக்கட்டான ஓர் நேரத்தில் இருக்கிறோம். இருப்பிடங்களைவிட்டு பொருள் பண்டங்களை இழந்து அகதிகளாகி உள்ளோம். அன்றாட உணவுக்கும் அடிப்படைத் தேவைகளுக்கும் பாதுகாப்பான வாழ்வுக்கும் அவதிப்பட்டுக் கொண்டிருக்கிறோம். அடுத்து என்ன நடக்குமோ? என்ற ஏக்க உணர்வு எம் எல்லோரையும் குழப்பத்திலும் பயத்திலும் ஆழ்த்தியுள்ளது.

இவ்வேளையில் நாம் எல்லோரும் இறைவனில் ஆழ்ந்த் நம்பிக்கையும் இறைவன் நம்மைப் பாதுகாப்பார் என்ற உறுதியான மனமும் கொண்டவர்களாக இருப்போம்.

இடம்பெயர்ந்து மன வேதனையில்அல்லல்படுபவர்களோடு எம்மாலான சிறிய உதவிகளை பகிர்ந்துகொள்வோம். எமது சுயநலங்களை மறந்து மற்றவர்களும் அடிப்படை வசதிகளைப் பெற்றுவாழ எம்மாலான உதவிகளை செய்வோம். நாம் வாழும் முகாம்களையும், தங்குமிடங்களையும் துப்பரவாகவும் அழுக்கின்றியும் வைத்திருப்பது கூட நாம் மற்றவர்களுக்கு செய்யும் பெரிய உதவியாகும்.

நற்கருணை [illegible] இவ் ஆண்டிலே [illegible] பாடுகள் எதனையும் செய்வதற்கு எமக்கு சூழ்நிலை இடந்தரவில்லை. இருப்பினும் நற்கருணை நாதருக்கு விசேட ஆராதனைகள் செய்து எம் மண்ணுக்கும் மக்களுக்கும் விடுதலையும் அமைதியும் கிடைக்க வேண்டுவோம். பங்குகளிலும் கூடியிருக்கும் இடங்களிலும் உங்களோடு இருக்கும் குருக்களின் துணையோடு தற்காலிக நற்கருணை சிற்றாலயங்களை அமைத்தோ அல்லது நற்கருணை வழிபாடுகளை நிகழ்த்தியோ அமைதிக்காக செபியுங்கள்.

உங்களுடைய ஞானத் தேவைகளுக்கு அருகிலுள்ள குருக்களை நாடுங்கள். இக்கட்டான இந்த நேரத்தில் மக்களுக்குத் துணையாக இருந்து ஆறுதலைத் தருவது குருக்கள் செய்யக்கூடிய பெரிய பணியாகும் என்பதை உணர்ந்து குருக்கள் உங்களுக்கு பெரிதும் துணைபுரிவார்கள்.

நாமும் சமாதானத்துக்கும் அமைதிக்கும் செய்யக்கூடிய அனைத்து முயற்சிகளிலும் ஈடுபட்டுள்ளோம். ஜனாதிபதிக்கும் எதிர்க்கட்சித் தலைவருக்கும் வெளிநாட்டுத் தூதரகங்களுக்கும் பல கடிதங்களை எழுதி எம் மக்களின் நிலைகளை அவர்களுக்கு விளக்கி தமிழ் மக்களுக்கு அமைதியும் சமாதானமும் தரும் நிலையான தீர்வுக்கு உழைக்கும்படி கேட்டுள்ளோம். இந்திய பிரதமருக்குக்கு நாம் எழுதிய கடிதத்தில் தமிழ் மக்களுடைய நிலைப்பாட்டையும் மிக விரைவாக இந்திய தரப்பினர் எடுக்கவேண்டிய நடவடிக்கைகளையும் விளக்கியுள்ளோம். இந் நேரத்தில் இந்திய அரசு நீதியோடு செய்யும் பணி உயிர் காக்கும் பணி என அவர்களுக்கு விளக்கியுள்ளோம்.

நம்பிக்கையும் ஆறுதலும் தரும் இந்த வார்த்தைகளை பாதுகாவலன் பத்திரிகையூடாக உங்களோடு பகிர்ந்துகொண்டு தொடர்ந்தும் இறைவனில் நம்பிக்கைகொண்டு ஒன்றாக இருந்து செபிக்கும்படி அழைப்பு விடுக்கிறோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாதுகாவலன்

## எம் கருத்து

### யூபிலி ஆண்டில் பங்குகள்தோறும் நற்கருணைச் சிற்றாலயங்கள்

இரண்டாயிரம் யூபிலி ஆண்டான இவ்வாண்டு நற்கருணை ஆண்டாகும். "இயேசுக் கிறீஸ்து உலகின் ஒரே இரட்சகர் புதிய வாழ்வின் அப்பம்" எனப் பொறிக்கப்பட்ட யூபிலி ஆண்டுப் போஸ்டர்களை யூபிலிக் குழு இவ்வாண்டின் ஆரம்பத்தில் எம் சிந்தனைக்கு வைத்தது.

யூபிலி ஆண்டின் ஆயத்தங்கள் பற்றிய தம் திருமடலில் யாழ். ஆயர் தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை நற்கருணையின் முக்கியத்துவத்தை உணர்த்தி இறைமக்கள் இவ்வாண்டில் நற்கருணை மட்டில் ஆழ்ந்த பக்தியும் உறவும் கொள்ளவேண்டுமென அழைப்பு விடுத்தார்.

யூபிலி ஆண்டுக் குழு கூட்டத்தில் யாழ். ஆயர் அவர்கள் நற்கருணை சிற்றாலயங்களை பங்குகளில் அமைக்க வேண்டியதன் முக்கியத்துவத்தை வலியுறுத்தினார். இறைமக்கள் மத்தியில் நற்கருணை பக்தியை வளர்த்துநற்கருணை தரிசிப்பை ஊக்குவிக்கவும் நாட்டின் சமாதானத்துக்காக செபிக்க நற்கருணை சிற்றாலயங்கள் பெரிதும் துணைபுரியும் என்றபடியால் பங்குத்தந்தையர்கள் இவ் விடயத்தில் கவனம் செலுத்தும்படியும் வேண்டுகோள் விடுத்தார்.

பங்குகள்தோறும்நற்கருணை சிற்றாலயங்கள் யூபிலி ஆண்டில் அமைக்கப்பட வேண்டும் என்ற எண்ணக்கருவிற்கு முற்றுமுழுதாக உருக்கொடுக்க வேண்டியவர்கள் பங்குத் தந்தையர்களே. நாட்டு நிலைமையையும், பங்கின் தேவையையும், வசதியையும் கவனத்திற்கொண்டு இப் பணியில் பங்குத் தந்தையர்கள் அதிக ஆர்வம் காட்ட வேண்டுமென அழைப்பு விடுக்கின்றோம்.

நற்கருணைப் பக்தியில் இறைமக்களை பெரிதும் வழிகாட்டிவரும் செபமாலை தாசர் சபையினர் அருள் ஆச்சிரமத்தில் நற்கருணைப் பக்தியை வளர்ப்பதில் இவ்வாண்டில் இன்னும் அதிக கவனம் செலுத்த வேண்டும். மற்றப் பக்தி முயற்சிகளைக் காட்டிலும் நற்கருணைப் பக்தியில் அதிக கவனம் செலுத்த அழைப்பு விடுக்கிறோம்.

கொழும்பில் பெற்றாவில் அமைந்துள்ள நற்கருணைநாதர் சிற்றாலயம் நகரின் மத்தியில் போக்குவரத்து, சனநடமாட்டம், சத்தங்கள் என்பவற்றின் இடையில் இருந்தாலும் மக்கள் எப்போதும் இருந்து செபிப்பதைக் காணக்கூடியதாக இருக்கின்றது.

பங்குகள்தோறும்நற்கருணை சிற்றாலயங்களை அமைக்க முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்ற இவ் வேளையில் யாழ். மறை மாவட்டத்திற்கென நகரப் பகுதியில் அனைவரும் வந்து நற்கருணை அனுபவத்தைப் பெறத்தக்கவிதமாக ஒரு நற்கருணை சிற்றாலயம் அமைக்கப்படுவதற்கான காலம் இதுவென நாம் சுட்டிக்காட்ட விரும்புகின்றோம். நாட்டு நிலைமைகள் பெரிதும் சாதகமாக அமையாவிடினும் மக்களின் பக்தி அனுபவத்தை வளர்க்கின்ற விதமாக இம் முயற்சியில் சம்மந்தப்பட்டவர்கள் ஈடுபடவேண்டும் என அழைப்புவிடுக்கிறோம்.

இந்த நற்கருணை சிற்றாலயங்கள் மூலமாக நற்கருணை பக்தியும் நற்கருணை அனுபவமும் அனைவருக்கும் கிடைக்க வழி சமைப்போம்.

# நற்கருணைச் சிற்றாலயம் - அருளின் அருவி

**அருள்தந்தை இ. ஸ்ரலின்**
**பிலிப்பைன்ஸ்**

இலங்கையில் கத்தோலிக்க மக்கள் நற்கருணை ஆண்டவரில் பக்தி நிறைந்தவர்கள். நற்கருணை எழுந்தேற்றம் நிகழும் போதெல்லாம் பக்திப் பரவசத்தோடு அவர்கள் பங்குபற்றுவது நாம் காணும் அனுபவம். குறிப்பாக ஆலயப் பொருள்களின் வெஸ்பர் தின வழிபாட்டிலே இதனைத் தெளிவாகக் காண்கின்றோம். யாழ். நகரில் செபமாலைதாசர் ஆச்சிரமத்திலும் மன்னாரில் மடுத்திருப்பதி நற்கருணைச் சிற்றாலயத்திலும் கொழும்பு நகரில் பெற்றாவில் அமைந்துள்ள புனித பிலிப்புநேரியார் ஆலயத்திலும் நற்கருணை ஆண்டவர் முன்கூடும் பக்தர்கள் பலர் இப்பக்தியில் நிறைந்திருக்கும் அருள் அருவியில் குளித்து மகிழ்ந்தவர்கள்.

நமது மறைமாவட்டத்தில் செபமாலைதாசர் சபை அருள் சகோதரிகள் தம் மடத்தினுள்ளே நற்கருணை ஆண்டவரை நாள் முழுதும் எழுந்தேற்றம் பண்ணி துன்புறும்நம் மக்களுக்காகவும் ஏனைய திருச்சபை மற்றும் உலக மக்களின் தேவைகளுக்காகவும் தினமும் அவர்முன் செபித்து வருகிறார்கள். அவர்களின் செபம் எமக்கு இறைபலத்தைக் கொடுத்துக் கொண்டே இருக்கின்றது.

ஆன்மீக பலத்தை அன்னை திரேசா தன் பணிவாழ்வில் பெற்றது நற்கருணை ஆண்டவரின் பிரசன்னத்தில், என்பதை ஒரு பேட்டியின் போது வெளிப்படுத்தியிருந்தார். தோமஸ் மேட்டன் எனும் புகழ்பெற்ற ஆன்மீகத்துறவி உரையோ அல்லது கட்டுரையோ தயாரிக்குமுன் நற்கருணை ஆண்டவர் முன் இருந்து நீண்டநேரம் செபிப்பது வழக்கம். அச் செபவேளையில் ஆண்டவர் வெளிப்படுத்தும் கருத்துக்களை எழுத்தில் வடிப்பார். இவர் எழுதிய புத்தகங்கள் அவர் இறந்தபின்னும் பலரின் ஆன்மீக வாழ்வுக்கு இன்றும் வழிகாட்களாக அமைந்துள்ளன. புனித பத்தாம் பத்திநாதர் நற்கருணை ஆண்டவரில் பக்தி நிறைந்தவர். நற்கருணையின் திருத்தந்தை என அழைக்கப்பட்டவர். அனைத்தையும் கிறிஸ்துவில் புதுப்பிக்க நற்கருணைப் பக்தியை ஒரு வழியாக மக்களுக்கு வெளிப்படுத்தியவர். நற்கருணை ஆண்டவரில் பக்தி கொள்ளாத புனிதர் எவருமில்லை.

பிலிப்பைன்ஸில் பெரும்பாலான ஆலயங்களின் உட்பகுதியில் அல்லது ஆலயத்தோடு அண்டிய கட்டடத்தில் அல்லது ஆலய வளவில் அமைதியான ஒரு பகுதியில் நற்கருணைச் சிற்றாலயம் அமைந்திருக்கின்றன. நான் வாழும் பங்கின் ஆலய வளவிலும் அழகிய நற்கருணைச் சிற்றாலயம் ஒன்று அமைந்துள்ளது. இரவு 11மணி வரை பங்குமக்கள் வந்து நற்கருணை ஆண்டவரோடு ஒன்றித்து செபிப்பதையும் பக்தி முயற்சிகளில் திளைத்திருப்பதையும் தவறாது காணலாம். நற்கருணை ஆண்டவர் முன்னே தியானத்தில் மூழ்கியிருப்பவர்கள் மகிழ்ந்து பாடுவார்கள். ஏக்கப் பெருமூச்சோடு செபிப்பவர்கள், கண்ணீர் சிந்தி அழுபவர்கள், ஆவியானவர்க்கு ஆராதனை செய்பவர்கள், இறை வார்த்தை வாசித்துத் தியானிப்பவர்கள், நோவனைச் செப வழிபாடு நிகழ்த்துபவர்கள் எனப் பல்வேறு வகையானவர்களைக் காணக்கூடியதாக இருக்கிறது. பிந்திய இரவில் கூடச் சிறுவர்கள், இளைஞர் கள், தனித்தோ குழுவாகவோ வந்திருந்து செபிப்பது, பாடுவது பார்க்க ஒரு மகிழ்ச்சியான அனுபவம். பங்குப் பாடசாலை மாணவர்கள் வகுப்புவாரியாகச் செபிக்க வருவார்கள். ஆசிரியர்கள் மற்றும் பாடசாலை ஊழியர்கள் அனைவரும் கூடியிருந்து செபிப்பார்கள். நற்கருணைச் சிற்றாலயம் அமைத்து நற்கருணை ஆண்டவரோடு ஒன்றிக்கும் பழக்கம் இங்கு 1985இல்- ஆரம்பமானதாகக் கூறப்படுகிறது. திருத்தந்தை இரண்டாம் அருள் சின்னப்பரே இதனை ஊக்குவித்ததாகத் தெரிகிறது.




பிலிப்பைன்ஸிலில் யன்னல்கள் கதவுகள் மூடியநிலையில் நற்கருணைச் சிற்றாலயங்கள் குளிருட்டப்பட்டுள்ளன. இதனால் பராக்கின்றிச் செபிக்க உதவியாக உள்ளது. நற்கருணைச் சிற்றாலயங்களின் கட்டட அமைப்பு பராக்கின்றிச் செபிக்கத் துணைபுரிவதாக அமைவதே நல்லது. மனஒடுக்க நிலையை அடையச்செய்ய ஏற்றதாக இருப்பது சிறந்தது. இவ் உண்மையைக் கருத்திலெடுத்தே இந்து ஆலயங்கள் கட்டட அமைப்புச் செய்யப்படுவதாக எண்ணுகிறேன். கற்பக்கிருகம் ஆலயத்தின் மண்டப்பகுதியை விட ஒடுங்கிய பகுதியாக அமைந்திருப்பது கண்கூடு. இப்பகுதியில் யன்னல்களோ, கதவுகளோ இல்லை. சத்தம் பராக்குகளை இது குறைக்கவல்லது. கண்ணை உறுத்தும் ஒளி மனஒடுக்கத்துக்கு ஊறாக அமையும். எனவே அப்பகுதி மங்கலான ஒளியைக் கொண்டிருக்கிறது. தீப ஒளியே அங்கு பெரும்பாலும் பாவிக்கப்படுவதுண்டு.

கோயிலில் நற்கருணை இருக்க நற்கருணைச் சிற்றாலயம் என்று இன்னொன்று தேவையா? எனும் கேள்வி சிலர் மனதில் எழக்கூடும். நமது நாட்டிலும் பிலிப்பைன்ஸிலும் பலர் நற்கருணைச் சிற்றாலயத்தால் பயனடைகிறார்கள் என்பது அனுபவம் காட்டும் உண்மை. பராக்கின்றி மனதை ஒருமுகப்படுத்திச் செபித்து ஆண்டவரோடு ஒன்றிக்கவும் நமது ஆன்மாவின் ஆழத்திலே அவர் பிரசன்னத்தை அனுபவிக்கவும் ஆன்ம மறுமலர்ச்சியடையவும் நற்கருணைச் சிற்றாலயங்கள் நிச்சயம் சிறந்த சாதனமாக அமைகிறது. ஆறுதலும் துன்பம் தாங்கச் சக்தியும் அளிக்க வல்லமையுடையனவாக விளங்குகின்றன.

இங்குள்ள நற்கருணைச் சிற்றாலயத்தில் அன்றாடம் செபிக்க வரும் சிலரிடம் கேட்டேன்:

**ஆலயத்தில் நற்கருணை ஆண்டவரோடு செபத்திலிருப்பதற்கும் நற்கருணைச் சிற்றாலயத்தில் இருப்பதற்குமிடையே என்ன வேறுபாடு அனுபவிக்கிறீர்கள்?**

* நற்கருணை ஆண்டவரை இங்கு எழுந்தேற்றம் பண்ணி வைக்கப்பட்டுள்ளது. கோயிலில் அப்படியில்லை. இதனால் அவர் பிரசன்னத்தை இதயத்துள்ளேயே இலகுவில் உணரக் கூடியதாக இருக்கிறது.

* ஆலயத்தில் பராக்குகள் அதிகம். ஆனால் நற்கருணை ஆலயத்தில் வருவோர்கள் போவோர்கள் கதவைப் பாவிக்கும் போது ஏற்படும் சத்தம் தவிர பராக்கின்றி நன்றாகச் செபிக்கக் கூடியதாக இருக்கிறது.

* சிறிய கட்டட அமைப்பு என்பதால் மனதை ஒருமுகப்படுத்திச் செபிப்பது இலகுவாக உள்ளது.

* ஆலயத்தில் குழுமமாகச் செபிக்கிறோம். ஆனால் நற்கருணைச் சிற்றாலயத்தில் ஆண்டவரோடு தனித்து ஆழமான உறவு கொள்ளக்கூடியதாக இருக்கிறது.

* நாளின் பெரும்பகுதியை ஆண்டவர்முன் கழிக்கும் ஜெரி ஓகஸ் அவர்களின் பதில் வித்தியாசமாக இருந்தது. "1985 ஆம் ஆண்டு பிலிப்பைன்ஸில் நற்கருணைச் சிற்றாலயம் அறிமுகமானது. இந்த அனுபவத்தின் பயனாக நான் நல்ல சுகதேகியாக இருக்கிறேன். சென்ற ஐப்பசி மாதத்தில் மட்டும் எனக்குச் சிறு சுகவீனம் ஏற்பட்டது. மற்றபடி நோய் என்று எனக்கு ஏதுமில்லை" என்றார். தொடர்ந்து சொன்னார் "முன்பு, இச் சிற்றாலயத்துள் பீடத்தில் மட்டும் கதிர்பாத்திரத்தில் நற்கருணை எழுந்தேற்றம் பண்ணி வைக்கப்பட்டிருந்தது. ஆட்கள் வந்து தொட்டு வணங்கத் தொடங்கியதாலும் அயற்பங்கில் கதிர்பாத்திரத்துடன் களவு போனதாலும் பின்பு கண்ணாடியால் அடைப்புச் செய்யப்பட்டது."

* இன்னொரு அம்மா நற்கருணைச் சிற்றாலயத்தில் ஆண்டவர் முன் அடிக்கடி கண்ணீர் சிந்தி செபிப்பதை பார்த்திருக்கிறேன். ஒருநாள் என்னருகே வந்து தன் சோகத்தை பகிர்ந்தார். பிரமாணிக்கமற்ற கணவனால்வேதனையை அனுபவித்து வருபவர் இவர். தன் குடும்பவாழ்வுக்காக செபிக்கும்படி கேட்டார் - செபித்தேன். சில வாரங்களின் பின் அழுவதைக் காணமுடியவில்லை. கணவன் மனமாற்றமடைந்து விட்டாராக்கும் என எண்ணி, "உங்கள் குடும்பவாழ்வு இப்ப எப்படி?" எனக் கேட்டபோது நற்கருணை ஆண்டவரைச் சுட்டிக் காட்டி, ''அவர்தான் இப்பொழுதும் தாங்கும் சக்தியை எனக்குத் தந்துள்ளார். ஆனால் இன்னமும் என் கணவனின் மனம் மாறவில்லை. ஆனால் தொடர்ந்து செபிக்கிறேன்" எனக் கூறினார். நற்கருணைச் சிற்றாலயமே அவளின் ஆறுதலும் தேறுதலும்.

நற்கருணைச் சிற்றாலயங்கள் ஆன்ம மறுமலர்ச்சியை நிச்சயம் கொண்டுவரும் சாதனமாக அமையும் என்பதில் எள்ளளவும் சந்தேகமில்லை. ஆண்டவரின் நற்கருணைப் பிரசன்னம் துன்புறும் நம் மக்களுக்கு ஆறுதலின் அருவியாகவும், சமாதானத்தின் ஊற்றாகவும், நல்ல தீர்வை விரைவுபடுத்தும் கருவியாகவும் விளங்கும். - நம் விடுதலைப் பயணத்தில் நம்மை வழிநடத்திச் செல்லும் மேக - நெருப்புத் தூணாக நம்மோடு தொடர்ந்துவரும் பிரசன்னமாகத் திகழும். நம்முள் மறைந்திருக்கும் பாவ வேர்களைத் தெளிவாக அடையாளம் கண்டு அறுத்தெறிக்கும் புல்வெட்டியாகவும் அது அமையும். குழப்பமுற்ற வேளையில் மனத்தெளிவு தருவதாகவும், எதிர்காலம் இருள் சூழ்ந்ததாகத் தெரியும் போதெல்லாம் விடிவெள்ளியாகவும், வாழ்வு அர்த்தமற்றதாகத் தோன்றும் போது ஆயிரம் அர்த்தங்களைக் கண்டு நம்பிக்கையும் புத்துணர்வும் கொண்டு வாழச் செய்யும் ஞானத்தின் கோலாகவும், அகத்துள் சுடர்விடும் அற்புத விளக்காகவும் திகழும். இப் பிரசன்னத்தில் கிடைக்கக்கூடிய பயன்கள் எழுத்தில் வடித்து முடிக்க இயலாதவை.

இவ் யூபிலி ஆண்டு நற்கருணையை மையமாகக் கொண்டுள்ளது மகிழ்ச்சிக்குரியது. யாழ். மறைமாவட்ட ஜூபிலி ஆணைக்குழுக் கூட்டத்தில் ஆயர், ''பங்குகளில் நற்கருணைச் சிற்றாலயங்கள் அமைப்பது சிறந்தது'' எனக் கூறிய கருத்தை காவலனில் வாசித்த போது மிகவும் மகிழ்ச்சியடைந்தேன். நமது நாட்டில் நற்கருணைச் சிற்றாலயங்கள் பல உருவாக வேண்டும் என்பதே எம் ஆவல். நமது மறைமாவட்டத்தில் ஆயர், குருக்கள், கன்னியர், பொதுநிலையினர் அனைவரும் நற்கருணை ஆண்டவர் முன் மண்டியிட்டு வேண்டுபவர்கள் நற்கருணை பக்தி நிறைந்தவர்கள், அதன் பயனை அனுபவித்தவர்கள். யுத்த மேகம் மீண்டும் கருமையடைந்து தோன்றும் வேளையிலேயே நற்கருணைச் சிற்றாலயத்தின் தேவை வலிமையடைகிறது. அனைவரதும் ஒன்றுபட்ட முயற்சியால் பல நற்கருணைச் சிற்றாலயங்கள் விரைவில் உருவாகும் என நம்புகிறேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பணி அரும்புகள்

## 20ஆம் நூற்றாண்டின் ஆன்மீக நட்சத்திரம் யார்?

### போட்டி முடிவுகள்

எமது அன்பான 'பணி அரும்புகள்' வாசக நெஞ்சங்களே! வணக்கம். '20ஆம் நூற்றாண்டின் ஆன்மீக நட்சத்திரம்' என்ற தலைப்பில் நாம் நடாத்திய போட்டியில் ஆர்வத்தோடு திரளாகக் கலந்துகொண்ட உங்கள் அனைவருக்கும் 'பணி அரும்புகள்' சார்பாக நன்றியைத் தெரிவிப்பதில் மகிழ்ச்சி அடைகின்றோம். உங்கள் வாக்குகளின்படி வேட்பாளர்கள் பெற்ற வாக்குகளை கீழே தருகின்றோம்.

| | |
|---|---|
| 1. அன்னை திரேசா | 221 |
| 2. 2ஆம் அருளப்பர் சின்னப்பர் | 120 |
| 3. தந்தை பீயோ | 71 |
| 4. சுவாமி ஞானப்பிரகாசர் | 64 |
| 5. 23ஆம் அருளப்பர் | 50 |
| 6. 6ஆம் சின்னப்பர் | 45 |
| 7. அருள்திரு தோமஸ் அடிகள் | 34 |
| 8. பேராயர் ஒஸ்கார் ரொமேரோ | 23 |
| 9. அருள்திரு பிலிப் பொன்னையா | 10 |
| 10. ஆயர் எமிலியானுஸ்பிள்ளை | 08 |

ஆகவே உங்கள் தெரிவின்படி 20ஆம் நூற்றாண்டின் ஆன்மீக நட்சத்திரமாகத் தெரிவுசெய்யப்பட்டிருப்பவர் அன்னை திரேசா ஆவார். இதன்படி அன்னை திரேசாவை முதல் தெரிவாக தெரிவு செய்தவர்கள் பரிசுக்கு தேர்ந்தெடுக்கப்பட தகுதி உள்ளவர்கள். இவர்களில் குலுக்கல் முறையில் தெரிவுசெய்யப்பட்டு பரிசுபெறும் அதிர்ஷ்டசாலிகளின் விபரங்களைத் தருகின்றோம்.

**1ஆம் பரிசு : ரூபா 500/=**

சவுந்தரம் தினேஷ்,
புனித. செபஸ்தியார் வீதி,
சில்லாலை,
பண்டத்தரிப்பு.

**2ஆம் பரிசு : ரூபா 250/=**

சியாமளா அல்பேட் பற்றிக்,
22, குறோசெற் லேன்,
சுண்டிக்குளி,
யாழ்ப்பாணம்.

**3ஆம் பரிசு : ரூபா 100/=**

ஜி.உமாகாந்த்,
போதனா வைத்தியசாலை,
யாழ்ப்பாணம்.

அழகிய கிறிஸ்தவ படங்களை ஆறுதல் பரிசாகப் பெறும் 10 பேர்

1.சுகிர்தா அருளானந்தம்,
மணற்காடு,
குடத்தனை.

2.ஜெசிக்கா அல்பேட் பற்றிக்,
22, குறோசெற் லேன்,
சுண்டிக்குளி,
யாழ்ப்பாணம்.

3.அன்ரன் றஜீவ் பெர்ணான்டோ,
57, சப்பல் வீதி,
யாழ்ப்பாணம்.

4.லூ.றொய்சி லூஜினி,
28, கோவில் லேன்,
நாவாந்துறை,
யாழ்ப்பாணம்.

5.செ.ராம்தாஸ்,
திருநெல்வேலி கிழக்கு,

6.ஹென்றி வர்மா,
சென். மேரிஸ் லேன்,
பண்டத்தரிப்பு.

7.நிர்மலா அந்தோனிமுத்து,
12,மவுண்கார்மல் வீதி,
யாழ்ப்பாணம்.

8.ஹென்றி ஆன் டொரினா,
சென். மேரிஸ் லேன்,
பண்டத்தரிப்பு.

9.ப.பிலோமினா,
22,குறோசெற் லேன்,
சுண்டிக்குளி,
யாழ்ப்பாணம்.

10.பிலிப்பையா மரியதாஸ்,
பதுவளை,
பொலிகண்டி.

முதல் மூன்று பரிசுக்குரியவர்களும், மற்றும் யாழ்ப்பாணத்தை விலாசமாகக் கொண்ட ஆறுதல் பரிசு பெறுபவர்களும் இல.24. கண்டி வீதியிலுள்ள இடைநிலை குருமடத்தின் 'பணி அரும்புகள்' காரியாலயத்தில் பரிசில்களை பெற்றுக்கொள்ளவும். ஏனையவர்கள் உங்கள் பங்குத் தந்தையிடமிருந்து பரிசில்களை பெற்றுக் கொள்ளலாம்.

**வன்னி மறைக்கோட்ட, வெளிமாவட்ட வாசகர்களுக்கு...**

மேற்படி எமது போட்டியின் முடிவுதிகதி 15.04.2000 என்று அறிவிக்கப்பட்டபடியால் பரிசுக் குலுக்கலை 17.04.2000 அன்று நடத்தினோம். ஆனால் அதற்குப் பின்னரும் வன்னியிலிருந்தும் மற்றும் பல வெளிமாவட்டங்களிலிருந்தும் இப்போட்டிக்கான விண்ணப்பங்கள் கிடைத்துள்ளன. நாட்டுநிலைமை காரணமாக தபால் விநியோகங்கள் தாமதத்தைப் புரிந்துகொண்டு இவ் விண்ணப்பங்களைத் தட்டிக்கழிக்க நாம் விரும்பவில்லை. எனவே, யாழ்.குடாநாடு தவிர்ந்த வெளிமாவட்டங்களிலிருந்து ஆர்வத்தோடு இப்போட்டியில் பங்குகொண்டவர்களுக்கென சிறப்புக்குலுக்கல் ஒன்றை நடாத்தி சிறப்புப் பரிசுகளும் வழங்க உத்தேசித்துள்ளோம்.

எனவே, வன்னி மறைக்கோட்டத்திலிருந்தும் வெளிமாவட்டங்களிலிருந்தும் கலந்துகொண்ட வாசக நெஞ்சங்களே! கவலை வேண்டாம். நீங்களும் அதிர்ஷ்டசாலிகளாகலாம். இது பற்றிய விபரங்களை அடுத்த இதழ் 'பணி அரும்புகள்' தாங்கிவரும்.

மீண்டுமொருமுறை, போட்டியில் கலந்துகொண்ட அனைவருக்கும் நன்றியும், பரிசு பெற்றவர்களுக்கு வாழ்த்துகளும்கூறி விடைபெறுகின்றோம்.

*அருள்திரு. ப.யோ. ஜெபரட்ணம்,*
*காப்பாளர்: 'பணி அரும்புகள்'*

# அர்ச்சனைப் பூக்கள்



## திருவழிபாட்டில் திருஇசையும் அது படும் பாடும்

### ஓர் வரலாற்றுக் கண்ணோட்டம்

–அருள்திரு பா. பி. இராஜசிங்கம்

பங்குக் குருவுக்கும் பாடகர் குழாமிற்கும் இடையில் எந்தவித தொடர்பும் காணப்படாத நிலை. குருவானவரே திருவழிபாட்டைத் தலைமைதாங்கி நடாத்துபவர். எனவே வழிபாடு சம்பந்தமான கூட்டங்களில் பாடகர் குழாமிற்கும் முன்னுரிமை வழங்கப்பட வேண்டும். அத்துடன் எல்லோரும் பாடக்கூடிய பாடல்களைத் தெரிந்தெடுக்கப்படுவதினை விடுத்து பங்கில் உள்ள பாடகர் குழாமினர் பாடல்களைத் தனிச் சொத்தாகக் கருதி ஆதிக்கம் செலுத்த முற்படுகின்றனர்.

பாடகர் குழாமிற்குள்ளேயே போட்டிகள் வளர்க்கப்படுவதினால் அவர்களுக்குள்ளே அதிருப்திகள் ஏற்பட்டு பல தடவைகள் பாடல்கள் பாடாமலேயே திருவழிபாடுகள் நடந்தேறுகின்றன.

மேலும் புதிய பாடல்கள் இசையமைக்கப்படும்போது அதன் இறையியல் கருத்துக்கள் கவனிக்கப்பட வேண்டும். எளிமையான இசை அமைக்கப்படவேண்டும். அதனை வெளியீடு செய்வதற்கான முன் அனுமதி பெறப்பட வேண்டும்.

மேற்கூறப்பட்ட குறைபாடுகளாலும் நிபந்தனைகள் கவனத்தில் எடுக்காததினாலும் திருஇசையின் புனிதத்தன்மை மறைக்கப்படுகின்றது. இப்படிப்பட்ட குறைபாடுகளை நிவர்த்திசெய்ய நாம் அனைவரும் எம் ஒத்துழைப்பை வழங்க முன்வரவேண்டும். பாடல்களைப் பாடுவது தனியே பாடகர் குழாமின் பொறுப்பு என பொறுப்பற்று இருந்துவிடாமல் இறைமக்களாகிய எம் அனைவருக்குமே பங்கு உண்டு என உணர்ந்து செயற்பட வேண்டும். அவ்வாறே பாடகர் குழாமினரும் தற்புகழ்ச்சிக்காகப் பாடாது, அனைவரும் திருவழிபாட்டில் பங்கெடுக்கத் தூண்டி இறைவனை புகழ்ந்து இறைபணிசெய்ய முன்வரவேண்டும். (முற்றும்)

# யாழ்ப்பாண மறைசாட்சிகள்

கத்தோலிக்க மதத்தைப் பூண்டோடு ஒழிக்க வேண்டுமென்றிருந்த ஒல்லாந்தருடைய ஆட்சிக்குட்பட்ட ஒரு பகுதிக்கு ஒரு கத்தோலிக்க குரு சென்று பணியாற்றுவதில் இருந்த ஆபத்துக்களை வாஸ் அடிகள் நன்கு உணர்ந்திருந்தார். கவனமான பல ஆயத்தங்களின் பின் எதிர்ப்புக்கள் பலவற்றை மேற்கொண்டு ஆபத்துக்களுடாக தென்னிந்தியாவில் இருந்து படகொன்றில் புறப்பட்டு கடலில் புயலினால் அலைக்கழிந்த பின் மன்னார் வந்தடைந்து அங்கிருந்து 1687 இன் நடுப்பகுதியில் கால்நடையாக யாழ்ப்பாணம் வந்து சேர்ந்தார்.

ஒரு குரு இங்கு வருவதிலிருந்த கடும் ஆபத்துக் காரணமாக வேலை தேடி வரும் ஒரு ஏழைக் கூலியாளாக வேடமிட்டே வந்தார். வந்தபின் கத்தோலிக்கர் யார் யார் என்று இனம் காண்பது அடிகளின் முதற் பணியாய் இருந்தது. 30 வருடங்களாக அமுலில் இருந்து வந்த கடுமையான தடைச் சட்டங்களால் கத்தோலிக்கர் எவரும் வெளிப்படையாக தமது மத நம்பிக்கையை காண்பிக்காது மிகவும் அவதானமாகவே இருந்தனர். கத்தோலிக்கர் வீடுகளில் வெளியார் பார்க்கக் கூடிய விதத்தில் திருச்சுரூபங்களையோ படங்களையோ காணமுடியாதிருந்தது. எனவே அடிகள் தமது கழுத்தில் செபமாலை அணிந்து வீட்டுக்கு வீடு பிச்சையெடுக்கும் முறையைக் கையாண்டு அச்செபமாலை வீட்டிலுள்ளவர்களில் ஏற்படுத்தும் சாதகமான முகபாவனையைக் கொண்டு கத்தோலிக்கரை இனம்கண்டு பின் படிப்படியாக அவர்களுக்கு தாம் யாரென வெளிப்படுத்தினார். இது ஒரு புறமிருக்க ஏற்கனவே தென்னிந்தியாவிலிருந்து இயேசு சபையின் ஜோசவ்வாஸ் என்னும் குரு ஏழைத் தொழிலாளியாக மாறுவேடத்துடன் புறப்பட்டு விட்டார் என்றனுப்பிய செய்தியும் இரகசியமாகக் கத்தோலிக்கரிடையே பரவத் துவங்கியிருந்தது. (வளரும்)

# நல்ல தருணம்

இனப் பிரச்சனைக்குத் தீர்வு காண்பதற்குச் சரியான சந்தர்ப்பம் ஒன்று கிட்டியுள்ளது. அதனை உரிய முறையில் பயன்படுத்த வேண்டுமென்று ஜனாதிபதி சந்திரிகாவிடமும் விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரனிடமும் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் மற்றும் மன்னார் ஆயர்கள் இந்தக் கோரிக்கையைக் கூட்டாக விடுத்துள்ளனர்.

போரை முடிவுக்குக் கொண்டுவந்து சமாதானப் பேச்சுக்கள் மூலம் இனப்பிரச்சனைக்குத் தீர்வுகாண வேண்டும் என்பதனை அவர்கள் இரண்டு தலைவர்களிடமும் வலியுறுத்தியுள்ளனர்.

வெளிநாடு ஒன்றின் மத்தியஸ்தத்துடன் பேச்சுக்களை முன்னெடுக்கக்கூடிய சூழ்நிலை இப்போது உருவாகி உள்ளதால் இந்தச் சந்தர்ப்பத்தை நழுவவிடக்கூடாது என்பது ஆயர்கள் இருவரினதும் கருத்தாக உள்ளது.

இத்தகைய கருத்து அவர்களினது மட்டுமன்று, மக்களில் பெரும்பாலானோரின் நிலைப்பாடும் இதுவாகவே உள்ளது. தமிழர் தரப்பும் சிங்களவர் தரப்பும் இதற்கு முன்னர் பல தடவைகள் அரசியல் தீர்வுக்கான பேச்சுக்களை நடத்திய போதிலும் அவை வெற்றி தரவில்லை.

இந்தியாவின் மத்தியஸ்த முயற்சி (படைகளையும் அனுப்பிய முறை) வித்தியாசமானதாக இருந்ததால் அதுவும் வெற்றியளிக்கத் தவறிவிட்டது. இம்முறை மூன்றாம் தரப்பு ஒன்றின் உதவியுடன் முழுக்க முழுக்க அரசியல் பேச்சுக்களின் ஊடாகவே தீர்வுக்கு முயற்சிக்கப்பட உள்ளது. ஆகையால் சமாதானப் பேச்சுக்களுக்கான சாத்தியம் இம்முறை நிறையவும் உண்டென மக்கள் பலமாக நம்புகின்றனர்.

தமது இந்த நம்பிக்கை வீண் போகாமல் தடுப்பதில் ஜனாதிபதி சந்திரிகாவுக்கும் தலைவர் பிரபாகரனுக்கும் (மற்றெந்தத் தலைவர்களையும் விட) அதிக பங்குண்டு என்று மக்கள் கருதுகின்றார்கள். அவர்கள் அவ்வாறே செய்வார்கள் என்று எதிர்பார்க்கின்றார்கள்.

இத்தகைய ஒரு சூழ்நிலையில் அரசியல் பேச்சுவார்த்தை - சமாதானப் பேச்சுவார்த்தை - ஆரம்பமாக வாய்ப்பளிக்க வேண்டியது எல்லாத் தரப்புகளினதும் கடமையாகும்.

தமிழ் மக்கள் முழு அளவில் பாதிக்கப்பட்டவர்கள் என்பதால் அரசு - புலிகள் சமாதானப் பேச்சு விரைவில் ஆரம்பமாக வேண்டும், வெற்றி அளிக்க வேண்டும் என்பதில் தமிழ்க் கட்சிகள் உட்பட தமிழர் தரப்புகள் யாவும் ஆவலாக உள்ளன. தமிழர்கள் தமது பிறப்புரிமைகளை அனுபவித்துக் கௌரவமாகவும் சுயமரியாதையாகவும் ஆட்சி உரிமையுடனும் வாழ வகைசெய்யும் தீர்வு ஒன்று எட்டப்பட வேண்டும் என்பதில் மிக அக்கறையாக உள்ளனர்.

ஆகையால் தென்னிலங்கையில் உள்ள அரச தரப்புத் தவிர்ந்த ஏனைய தரப்புகளும் சமாதானப் பேச்சுக்களுக்கான முயற்சிகளுக்கு ஒத்துழைப்பு நல்க வேண்டும்.

சமாதானப் பேச்சு முயற்சிகளுக்கு முதல் உரிமை வழங்கும் விதத்தில் இராணுவ நடவடிக்கைகளை தணித்துக் கொள்வதில் இரு தரப்புகளும் முன்னர் எப்போதையும் விட இவ்வேளை அதிக நாட்டம் செலுத்துவது அவசியம்.

ஆயர்கள் கூறியுள்ளது போல, பேச்சுவார்த்தை மூலம் சமாதானத்தைக் கொண்டுவர வேண்டியதன் அவசியத்தை சர்வதேச சமூகமும் வலியுறுத்தி வருவதால், இந்த நல்ல தருணம் நழுவிப் போகாமல் பார்த்துக்கொள்ள வேண்டும்.

**நன்றி : உதயன்**
03-04-2000 **ஆசிரியர் தலையங்கம்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## ஆயரின் தினம் (Bishop's Day)

- 03.07.2000 -

யாழ். ஆயர் மேதகு தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகைக்கு இறை ஆசீர் மிக்க வாழ்த்துக்களை குருக்கள், துற வியர், இறைமக்கள் சார்பாக வழங்குகி றோம்.

03.07.2000 அன்று யாழ். ஆயர் பருத்தித்துறை புனித தோமையார் ஆலயத்தில் திருநாள் திருப்பலி நிறைவேற்றுவார்.

## மனித முன்னேற்ற நிலையத்தின் (HUDEC) நிவாரணப் பணிகள்

யாழ். மறைமாவட்ட மனித முன்னேற்ற நிலையத்தினர் யாழ். நகரின் இடம்பெயர்வைத் தொடர்ந்து தமது நிவாரணப் பணிகளை அதிகரித்துள்ளனர். இயக்குனர் சி.ஜி. ஜெயக்குமார் அடிகளின் தலைமையில் பங்குத் தந்தையர்களின் துணையுடன் பணிகள்இடம்பெறுகின்றன.

யாழ்.பல்கலைக்கழக மாணவர்களுக்கு துணைவேந்தரின் அழைப்பின் பேரில் பாவனைப் பொருள்களையும் உலர் உணவுப் பொருள்களையும் வழங்கியுள்ளனர். வடமராட்சி, வலிகாமம் மேற்கு, சுழிபுரம், வட்டுக்கோட்டை, மூளாய்ப் பகுதிகளில் உலர் உணவினையும், பாத்திரங்களையும் வழங்கியுள்ளனர். முகாம்களிலுள்ள இளைஞர், யுவதிகளூடாக கல்வி ஒழுங்குகளை மேற்கொண்டுள்ளனர்.

சிறுவர்களுக்கான ஊட்டச்சத்து வழங்கற் திட்டம் வலிகாமம், வடமராட்சி பகுதிகளிலுள்ள அனைத்து முகாம்களிலும் இடம்பெறுகிறது. இத் திட்டத்தில் கிட்டத்தட்ட 25ஆயிரத்து 876மாணவர்கள் பயன் பெற்றுள்ளனர்.

34முகாம்களில்வாழும் 1700 குடும்பங்களுக்கு உதவி திட்டப் பணிகள் வழங்கப்பட்டுள்ளது.

மாலை நேரங்களில் வகுப்புக்களும் பெற்றோருக்கான கருத்தரங்குகளும் இளைஞர்களுக்கான விழிப்புணர்வு கருத்தரங்குகளும் நடத்தப்படுகிறது.

வடமராட்சியில் கரவெட்டிப் பங்குத்தந்தை ஜேசுரட்ணம் அடிகளின் தலைமையில் கியூடெக் நிறுவன உதவிப் பணிகள் நடைபெற்றன.

கல்வி ஒழுக்கப் பண்பாடு கலை வெளிப்பாடுகள் மூலம் சிறுவர்களின் உடல், உளமேம்பாட்டுக்கு உதவும் களப்பயிற்சியும் ஒன்றுகூடலும் கலந்துரையாடலும் நடத்தப்பட்டது.

மானிப்பாய் பங்குத்தந்தை ஏ.எவ்.பெனட் அடிகளாரின் ஒழுங்கில் மானிப்பாய் அந்தோனியார் ஆலய வளவில் பாசையூர் புனித அந்தோனியார், கொழும்புத்துறை புனித சூசையப்பர் பாடசாலைகள் இயங்குகின்றன.

## அமலமரித் தியாகிகளின் உதவிப் பணிகள்

அமலமரித் தியாகிகளின் மாகாணத் தலைவரின் அனுமதியுடன் அருள்திரு டேமியன் அருள்திரு அன்புராசா, அருள்திரு செபஸ்ரின், அருள்திரு ஜெயந்தன் ஆகியோர் இணைந்து உதவிப் பணிகளை அண்மைக் காலங்களில் ஈடுபட்டு வருவதாகத் தெரிகின்றது.

இவ்வாண்டின் ஆரம்பத்தில் தாளையடி, செம்பியன்பற்று, அம்பன் பகுதிகளில் உதவிகள் தேவை என அரச அதிபர் கியூடெக் ஸ்தாபனத்திற்கு வேண்டுகோள் விடுத்தார். கொடுத்தபோது கியூடெக் ஸ்தாபனத்தினரின் அனுமதியுடன் அமலமரித்தியாகிள் குழுவினர் பணிகளை ஆரம்பித்தனர்.

ஆனைக்கோட்டை, நவாலி, அராலி பகுதிகளில் 4வயதுக்கு உட்பட்டவர்களுக்கு பால்மா வழங்கப்பட்டன.

விதவைகளின் தொழில் ஊக்குவிப்பு முயற்சியாகவும் பங்குத்தந்தையர்களின் பதிவின்படி பண உதவி வழங்கப்பட்டது.

சண்டிலிப்பாய் பாடசாலைகளில் இடம்பெயர்ந்தவர்களுக்கு உலர் உணவு வழங்கப்பட்டது.

யாழ்.பல்கலைக்கழக வெளிமாவட்டமாணவர்களுக்குஉதவி வழங்கப்பட்டது. திருச்சிலுவைக் கன்னியரின் உதவியுடன் சில்லாலையில் மருத்துவ சேவையும் வழங்கப்பட்டது.

## மைக்கல் சவிரிமுத்துஅடிகள் காலமானார்

அருள்திரு ஜே. மைக்கல் சரிவிமுத்து அ.ம.தி 29.05.2000 அன்று தமது 84ஆவது வயதில் கொழும்பில் காலமானார். புற்றுநோயினால் பீடிக்கப்பட்ட இவர் சிகிச்சைக்காக வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த போது இறைவடி சேர்ந்தார்.

இவர் பிரான்சிஸ் ஜோசப் அடிகளாரின் மாமனார் என்பது குறிப்பிடத்தக்கது.

## புனித பத்திரிசியார் கல்லூரி மானிப்பாயில்

புனித பத்திரிசியார் கல்லூரி மானிப்பாய் புனித அன்னாள் பாடசாலையில் மாலை இயங்குகின்றது. அதேவேளை 5ஆம் ஆண்டு புலமைப்பரிசில் மாணவர்கள் மானிப்பாய் அந்தோனியார் ஆலயத்திற்கு அருகாமையிலுள்ள வீட்டில் இயங்குகின்றது.

## சவேரியார் குருத்துவக்கல்லூரி பண்டத்தரிப்பில்

புனித சவேரியார் குருத்துவக் கல்லூரி தமது தொடர் இடம்பெயர்வால் அடுத்த கட்டமாகப் பண்டத்தரிப்பு இல்லத்தில் தற்காலிகமாக இயங்குகின்றது.

## இந்திய அரசு உடன் செயற்பட வேண்டும்

யாழ். ஆயர் தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை இந்திய பிரதமருக்கு இலங்கைக்கான இந்திய தூதுவர் திரு.S.மேனன் ஊடாக அவசர கடிதம் ஒன்றை மே மாதம் 30ஆம் திகதி அனுப்பிவைத்தார்.

அக் கடிதத்தில் இந்திய அரசு எமது இன்றைய நிலையைகருத்திற்கொண்டு தீர்க்கமான செயற்பாடு ஒன்றில் இறங்கும் என நம்பியிருந்தோம். இன்றுவரை உறுதியாக எதுவும் நடைபெறாதது எமக்கு வருத்தத்தை தருகிறது. இந்திய அரசு இந்நேரத்தில் உதவிக்கு வரவேண்டியது முக்கியமானதாகும்.

இந்தியப் பிரதமருக்கும் இந்திய அரசுக்கும் இலங்கை நாட்டில் அமைதியும் சமாதானமும் ஏற்பட மிக விரைவில் செயற்படும்படி தமிழ் மக்களின் பெயரால் இரக்கத்துடன் வேண்டுகிறோம். என்று கடிதத்தின் இறுதியில் தெரிவித்துள்ளார்.

## உதயன் மீதான தடையினை நீக்கவும்

மே மாதம் 20ஆம் திகதியுடன் தடைசெய்யப்பட்ட உதயன் பத்திரிகை மீதான தடையினை நிலைமையைக் கருத்திற்கொண்டு நீக்குமாறு யாழ்.ஆயர் அவர்கள் சம்பந்தப்பட்ட அமைச்சருக்கு 21.05.2000 அன்று கடிதம் ஒன்றை அனுப்பினார்.

அவர் அக்கடிதத்தில் மக்களின் தேவையறிந்து இக்கட்டான ஓர் நேரத்தில் நற்பணிபுரிந்து கொண்டிருந்த உதயன் பத்திரிகை மீதான தடையினை யாழ். நிலைமைகளை கருத்திற்கொண்டு உடனடியாக நீக்கும்படி வேண்டுகோள் விடுத்திருந்தார்.

## சாவகச்சேரி பங்குத்தந்தை வன்னியில்

சாவகச்சேரி பங்குத்தந்தை ஆனந்தக்குமார் அடிகள் 76 குடும்பத்தினருடன் சங்குப்பிட்டி ஊடாக கோணாவிலுக்கு இடம்பெயர்ந்துள்ளார்.

மட்டுவில் பகுதியில் மோதலில் சிக்கி இறந்த அப்பாவிப் பொதுமக்களின் தொகை ஏறக்குறைய 500க்கும் அதிகமாகலாம் என அவர் தெரிவிக்கிறார். நுணாவில் பகுதியில் தாம் புறப்பட்டு சென்றவேளையில் அதிகமான இறப்புக்கள் இடம்பெற்றதாகவும் மீசாலை, சரசாலை, மந்துவில் பகுதிகளில் மக்கள் இடம்பெயர்ந்து பாடசாலைகளில் தங்கியிருந்ததாகவும் என அவர் மேலும் தெரிவித்தார்.

தாளையடி பங்குத்தந்தை பிரான்சிஸ் அடிகளார் ஏற்கனவே இடம்பெயர்ந்து வன்னிக்குச் சென்றது தெரிந்ததே.

## யாழ். மக்களின் உயிரைப் பாதுகாக்கவும்

யாழ். ஆயர் மே மாதம் 18 ஆம் திகதி மேன்மை தங்கிய ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கவுக்கு அனுப்பிய கடிதத்தில் மேற்கண்டவாறு வேண்டுகோள் விடுத்துள்ளார். அவர் அக்கடிதத்தில் யாழ்ப்பாண மக்கள் எந்தவிதமான தொடர்பும் இன்றி துண்டிக்கப்பட்ட நிலையில் இருக்கின்றார்கள். போர் மேகங்கள் நெருங்கி வந்துகொண்டிருக்கும் இந்நிலையில் விடுதலைப் புலிகள் விடுத்த தற்காலிக போர்நிறுத்த அழைப்பை நிரந்தரத் தீர்வுக்கு முதற்படியாக ஏற்றுக்கொள்ளும்படி அழைப்பு விடுத்துள்ளார்.

# ஊர்காவற்றுறை அந்தோனியார் கல்லூரி அதிபராக யேசுதாஸ் அடிகள் நியமனம்



ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரியின் அதிபராக A.யேசுதாஸ் அடிகள் 26.04.2000 முதல் நியமனம் பெற்றுள்ளார். 1997ஆம் ஆண்டு மார்ச் மாதம் முதல் அந்தோனியார் கல்லூரியில் ஆசிரியராகவும் உப அதிபராகவும் இவர் நியமனம் பெற்றார். பின்னர் 1997ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் கல்வி நிர்வாகத்தில் முதுமாணிப் பட்டப்படிப்பினை (M.A.) வேல்ஸ் நகர கார்டிவ் பல்கலைக்கழகத்தில் மேற்கொண்டு 1998ஆம் ஆண்டில் பட்டத்தினைப் பெற்றுக்கொண்டார்.

யேசுதாஸ் அடிகள்1981ஆம் ஆண்டில் மதுரை அருளானந்தர் பல்கலைக்கழகத்தில் இளங்கலைமாணிப் பட்டத்தையும் (B.A.) 1985ஆம் ஆண்டு இறையியல் இளங்கலைமாணி (B.Th.) பட்டத்தையும் பெற்றுக்கொண்டார். தமது குருப்பட்டத்தினை 1985இல் பெற்றுக்கொண்ட பின்னர் 1986முதல் 1997வரை இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரியில் ஆசிரியராகவும் உப அதிபராகவும் பணியாற்றினார். இளவாலைப் பகுதி இராணுவத்தினரின் கட்டுப்பாட்டுக்கு உட்பட்ட பிரதேசமாக இருந்த 1992-1996 ஆண்டுகாலப்பகுதியில் ஹென்றியரசர் கல்லூரியின் தற்காலிக அதிபராகவும் கடமையாற்றியவர் என்பது குறிப்பிடத்தக்கது. 1996-1997 ஆண்டு காலப்பகுதியில் பட்டப்பின் கல்வி டிப்ளோமாவையும் (Dip.in Education) பெற்றுக்கொண்டார்.

தீவுப் பகுதியின் கல்விப் பணியில் பெரும்பங்காற்றி பல கல்விமான்களையும் குருக்களையும் ஆயர்களையும் உருவாக்கிய கலைக்கூடமான புனித அந்தோனியார் கல்லூரி ஆரம்பிக்கப்பட்டது முதல் யாழ். ஆயரால் நிருவகிக்கப்பட்டு வந்த தனியார் கல்லூரியாகவே இயங்கி வந்தது. இதன் அதிபர்களாக பணியாற்றியவர்களில் அருள்தந்தையர்கள் ஏ.ஜே. கருணாகரர், ஜே. ஜீவரட்ணம், எஸ்.ஜே. ஸ்ரனிஸ்லோஸ், எம்.ஜே. மரியாம்பிள்ளை, அல்பிரட் பெஞ்ஜமின், பி. சூசைப்பிள்ளை ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்கள்.

1961ஆம் ஆண்டு பாடசாலைகள் அரசிடம் கையளிக்கப்பட்டபோதும் இக் கல்லூரி தொடர்ந்தும் தனியார் கல்லூரியாகவே இயங்கியது.

1978ஆம் ஆண்டு இக் கல்லூரி அரசிடம் கையளிக்கப்பட்டு பணிப்பாளர் மேற்பார்வைக் கல்லூரியாகவும் 1AB தரமுடைய கல்லூரியாகவும் தரம் உயர்த்தப்பட்டது. 1976 இல் குருக்களின் நிர்வாகத்திலிருந்து பொதுநிலையினரின் நிர்வாகத்துக்கு கைமாறிய போது.திரு.எஸ்.ஏ.ஈ. ரட்ணராஜா அதிபரானார். 1995ஆம் ஆண்டு வரை இவர் பணியாற்றிய பின்னர் அருள் திரு ஏ.ஜேசுதாஸ் அடிகள் பொறுப்பேற்கும் வரை திரு. கே.ரட்ணசிங்கம் அதிபராக கடமையாற்றினார்.

இக்கல்லூரி குருக்களின் நிர்வாகத்தின் கீழ் மீண்டும் வருகின்றபோது பாரிய பொறுப்பினை யேசுதாஸ் அடிகள் ஏற்றுள்ளார். மீண்டுமொரு தடவை கல்லூரியை கட்டியெழுப்பி கல்விமான்கள் பலரை உருவாக்க பாதுகாவலன் அன்பு நெஞ்சங்களின் வாழ்த்துக்களை தெரிவிக்கிறோம்.

## யூபிலி புதிய.....

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

பட்டார்.

இவரது முதல் திருப்பலி 03.06.2000இல் வவுனியா புனித அந்தோனியார் ஆலயத்தில் இடம்பெற்றது.

ஜெயந்தன் பச்சேக் அ.ம.தி. கடந்த தை மாதம் 12ஆம் திகதி புனித செபஸ்தியார் ஆலயத்தில் மன்னார் ஆயர் அதிவணக்கத்திற்குரிய இராயப்பு ஜோசப் அடிகளால் குருவாக திருநிலைப்படுத்தப்பட்டார்.

தமது மெய்யியல் கல்வியினை புனித சவேரியார் பெரிய குருமடத்திலும் இறையியலை உரோமாபுரி புனித கிரகோரியார் பல்கலைக்கழகத்திலும் பயின்றவர்.

இவர் பேராயர் மார்செல்லோ சாகோ அ.ம.தி. அவர்களால் கடந்தவருடம் ஏப்ரல்17ம் திகதி உரோமபுரியில் திருத்தொண்டராக திருநிலைப்படுத்தப்பட்டார்.

## இடம்பெயர்ந்த நிலை...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

மே மாதம் முழுவதிலும் அவர்கள் செய்யவில்லை. இதனால் பெரிதும் துன்பப்படும் மக்களில் ஒரு பகுதியினருக்கு மனித முன்னேற்ற நடுநிலையம் உலர் உணவு வழங்கியுள்ளது.

## அ.ம.திகளின் குருமடம் சில்லாலையில்

அமலமரித் தியாகிகளின் புனிதவளனார் சிறிய குருமடம் அதிபர் அருள்திரு லொசிங்ரன், உதவியாளர் அருள்திரு அந்தோனிமுத்து ஆகியோரின் வழிகாட்டுதலில் சில்லாலை சுகந்தன் இன்னாசித்தம்பி வீட்டினில் தற்காலிகமாக இயங்கிவருகின்றது. 44 குருமடமாணவர்களுள் 5பேர் இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரிக்கு கல்வி கற்கச் செல்கின்றனர். 22பேர் ஆங்கிலக் கல்வியையும் 17பேர் ஜி.சீ.ஈ. உயர்தரக் கல்வியையும் அங்கு தங்கியிருந்தபடியே கற்கின்றனர்.

8 சகோதரர்களுடனான அ.ம.திகளின் இறையியல் கல்வியகம் சில்லாலை இன்னாசித்தம்பி வைத்திய நிலையத்தில் அமைந்துள்ளது. அதிபர் அருள்திரு போல் நட்சத்திரம் அவர்களோடு இருந்து பயிற்சியளிக்கின்றார். பண்டத்தரிப்பு தியான இல்லத்தில் இயங்கிவரும் புனித சவேரியார் குருத்துவக் கல்லூரியில் வகுப்புக்களுக்குச்செல்கின்றனர்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை யாழ். பிரதான வீதி 360 இலக்கத்தில் உள்ள புனிதவளன் கத்தோலிக்க அச்சகத்தில் அதன் முகாமையாளரால் ஒவ்வொரு முறையில் 2000ஆம் ஆண்டு வெளியிடப்பட்டுள்ளது.-P.197